அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.270/2015
தேதி. 10.11.2015

**மழை வெள்ளம் – மக்கள் பலியான சம்பவங்கள்**
**நெஞ்சை உருக்குகின்றன**
**மக்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.**
**ச.ம.க.நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை**

தமிழகமெங்கும் மழை, புயல், வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கடலூர் மாவட்டம் காட்டுப்பாளையத்தில் கால்வாயில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கத்தால், பெருமாள், வீரமுத்து குடும்பத்தினர் 10க்கும் மேற்பட்டவர்களும், மற்றும் கெடிலம் ஆற்று வெள்ளப்பெருக்கில் மூவர் உள்பட 16 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் நெஞ்சை உருக்குகின்றன. இறந்தவர்களின் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் தற்காலிகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்க வேண்டும்.மழை வெள்ளக் காலங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் பயணம் செய்வதில் மக்கள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். மழை வெள்ளப்பணிகளை சீர்செய்யவும்,மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் நிலையில் அப்பணியை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சமத்துவ மக்கள் கட்சித் தொண்டர்களும் ஆங்காங்கே மழை வெள்ளங்களில் தவிக்கும் மக்களுக்கு தேவையான உதவிகள் செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.